Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 211 | உள்ளூர் - 30.07.2026 | வியாழக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 211 | வெளியூர் - 31.07.2026 | வெள்ளிக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

12 ராசிகளுக்கும் பெஸ்ட் மேட்ச்... எது?

TNSTC-யில் 1,518 பயிற்சி பணியிடங்கள்..!

அண்ணாமலையின் புதிய அரசியல் அஸ்திரம்..!

டாஸ்மாக்: கைதாகிறாரா செந்தில் பாலாஜி...?

## லோக்சபா தொடங்கிய சிறிது நேரத்திலேயே முடங்கியது; எதிர்க்கட்சிகள் கடும் அமளி!



புதுடெல்லி, ஜூலை. 30–

பார்லிமெண்ட் மழைக்கால கூட்டத்தொடரில் இன்று (ஜூலை 30) அவை தொடங்கிய சிறிது நேரத்திலேயே எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் லோக்சபாவை மதியம் 2 மணி வரை சபாநயாகர் ஓம்பிர்லா ஒத்திவைத்தார்.

பார்லி., மழைக்கால கூட்டத்தொடர் கடந்த, 20ல் தொடங்கிய நிலையில், 'நீட்' வினாத்தாள் கசிவு தொடர்பாக டில்லி ஜந்தர் மந்தரில் கரப்பான்பூச்சி ஜனதா கட்சி நடத்திய போராட்டத்தில் இளைஞர்கள் மீது தடியடி நடத்திய சம்பவம் பார்லி.,யிலும் எதிரொலித்த நிலையில், கூட்டத்தொடர் நடக்காமல், இரு சபைகளிலும் அமளி காரணமாக ஒத்திவைக்கப்பட்டு, பிறகு மீண்டும் கூடி நடந்து வருகிறது.

இந்நிலையில் (ஜூலை 30) காலை 11 மணிக்கு லோக்சபா கூடியதும் எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். சபாநாயகர் ஓம்பிர்லா பலமுறை எச்சரித்தும் எம்பிக்கள் கண்டு கொள்ளாமல் தொடர் அமளியில் ஈடுபட்டனர். இதனால் கடும் கூச்சல், குழப்பம் நிலவியது. அவையை மதியம் 2 மணி வரை சபாநாயகர் ஓம்பிர்லா ஒத்திவைத்தார்.

ராஜ்யசபா அமளிக்கு இடையே காலை 11 மணிக்கு கூடி நடந்து வருகிறது. ராஜ்ய சபாவில் மத்திய அமைச்சர் நட்டா பேசுகையில், " அவையின் தலைவர் மூலமாக நான் கூற விரும்புவது என்னவென்றால், எதிர்க்கட்சியின் பங்கு முற்றிலும் எதிர்மறையாகவே இருந்துள்ளது.

கூட்டத்தொடர் தொடங்கியதிலிருந்து, அவையைச் சீர்குலைப்பதிலும், அவை செயல்படுவதைத் தடுப்பதிலுமே அவர்களின் முழு கவனமும் இருந்து வருகிறது", என்றார்.

## அமித்ஷா கையால் புதுச்சேரி போலீஸுக்கு நாட்டின் உயரிய 'President's Colours' விருது!



புதுடெல்லி, ஜூலை. 30–

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வரும் ஆகஸ்ட் 8–ஆம் தேதி புதுச்சேரிக்கு வருகை தரவுள்ளார். இந்த விஜயத்தின் போது, சட்ட ஒழுங்கு பராமரிப்பு, பொது மக்களுக்கான சேவை மற்றும் துரித நடவடிக்கைகளில் சிறப்பாகச் செயல்பட்ட புதுச்சேரி காவல்துறைக்கு வழங்கப்பட்டுள்ள நாட்டின் மிக உயரிய கௌரவமான 'குடியரசுத் தலைவரின் கலர்ஸ்' (President's Colours) விருதுகளை அவர் வழங்குகிறார்.

கோரிமேட்டில் உள்ள பயிற்சிப்பள்ளி மைதானத்தில் நடைபெறும் பிரம்மாண்ட அணிவகுப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு இந்த விருதுகளை வழங்கி உரையாற்றவுள்ள அவர், புதுச்சேரியின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் தொடங்கிவைக்க உள்ளார்.

## மத்திய கிழக்கில் மீண்டும் போர் தீ! அமெரிக்கா-சவுதி கூட்டணி

### ஈராக் மீது அதிரடி தாக்குதல்!




ரியாத், ஜூலை. 30–

வளைகுடா பிராந்தியத்தில் போர் பதற்றம் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது. அமெரிக்கா – ஈரான் இடையேயான மோதல் நீடித்து வரும் நிலையில், ஈராக் நாட்டில் செயல்படும் Popular Mobilisation Forces (PMF)என்ற ஆயுத அமைப்பின் நிலைகள் மீது அமெரிக்கா மற்றும் சவுதி அரேபியா இணைந்து தாக்குதல் நடத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன. சவுதி அரேபியாவின் கிழக்கு மாகாணம் மற்றும் ரியாத்தில் உள்ள எண்ணெய் உள்கட்டமைப்புகள், அமெரிக்க ராணுவ நிலைகள் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த தாக்குதலுக்கு ஈராக் நாட்டில் செயல்படும் PMF அமைப்பே காரணம் என அமெரிக்கா மற்றும் சவுதி குற்றம்சாட்டியுள்ளன.

இதற்கு பதிலடியாக அமெரிக்காவின் சென்ட்காம் (CENTCOM) மற்றும் சவுதி ராணுவம் இணைந்து ஈராக் பகுதியில் உள்ள PMF நிலைகள் மீது வான்வழித் தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் PMF அமைப்பைச் சேர்ந்த 8 பேர் உயிரிழந்ததுடன், 4 பேர் காயமடைந்ததாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

தாக்குதலுக்குப் பிறகு சவுதி அரசு வெளியிட்ட அறிக்கையில், "போரைக் விரும்பவில்லை. ஆனால் எங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் தக்க பதிலடி கொடுக்கப்படும்" என்று எச்சரித்துள்ளது.

இதற்கிடையில், PMF அமைப்பு ஈரானுக்கு ஆதரவானதாகக் கருதப்பட்டாலும், சவுதி மீதான தாக்குதலில் தங்களுக்கு தொடர்பில்லை என்றும், தங்கள் மீது திட்டமிட்டு பழி சுமத்தப்படுவதாகவும் மறுப்பு தெரிவித்துள்ளது.

இந்த புதிய மோதல் வளைகுடா பிராந்தியத்தில் பாதுகாப்பு கவலைகளை மேலும் அதிகரித்துள்ளதுடன், சர்வதேச அளவில் எண்ணெய் சந்தை மற்றும் பிராந்திய அரசியல் சூழலிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற அச்சம் நிலவுகிறது.




தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் முன்னிலையில் சென்னையிலுள்ள வழிகாட்டி நிறுவனத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வழிகாட்டி நிறுவனத்திற்கும், தென் கொரியா நாட்டின் முன்னணி வாகன உதிரிபாக உற்பத்தி நிறுவனமான மோட்டிவ்லிங்க் (MotiveLink) நிறுவனத்திற்கும் இடையே, 1,500 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கிடும் வகையில், காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் பிள்ளைப்பாக்கம் தொழிற்பூங்காவில் 300 கோடி ரூபாய் முதலீட்டில் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தொழில் துறை அமைச்சர் செல்வி எஸ். கீர்த்தனா, தலைமைச் செயலாளர் மு. சாய்குமார், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச. விஜயகுமார், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தீபக் ஜேக்கப், மோட்டிவ்லிங்க் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் கிம் கி ஹான், மோட்டிவ்லிங்க் இந்தியாவின் மேலாண்மை இயக்குநர் ஹாங் சாங் ஜூன், மேலாளர்கள் செல்வி பித்யா ஷர்மா மற்றும் அதுல் ஷாக்யா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இன்சூரன்ஸ் துறையில் களமிறங்கும் பதஞ்சலி!




சென்னை, ஜூலை. 30–

பாபா ராம்தேவின் பதஞ்சலி நிறுவனமும், DS குரூப் நிறுவனமும் இணைந்து மேக்மா ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனத்தை ரூ.4,500 கோடிக்கு கையகப்படுத்துகின்றன. இதற்கு IRDAI ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் பதஞ்சலி 73.6% பங்குகளையும், DS குரூப் 24.5% பங்குகளையும் பெறுகின்றன. இதன் மூலம் பதஞ்சலி முதன்முறையாக இன்சூரன்ஸ் துறையில் அதிகாரப்பூர்வமாக நுழைகிறது. சிறு நகரங்கள் மற்றும் கிராமங்களில் காப்பீட்டு சேவையை விரிவுபடுத்தவும் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

## மேகதாது அணை கட்டும் விவகாரம்: விரிவான திட்ட அறிக்கையை நிராகரித்தது மத்திய நீர்வள ஆணையம்!



புதுடெல்லி, ஜூலை. 30–

மேகதாதுவில் புதிய அணை கட்டுவது தொடர்பாக, விரிவான திட்ட அறிக்கையை தயாரித்த கர்நாடக அரசு கடந்த மாதம் (ஜூன்) 7–ந் தேதி மத்திய நீர்வளத் துறை ஆணையத்தின் தலைமை பொறியாளருக்கு அனுப்பி வைத்தது.

## ஆக.1 முதல் அமலுக்கு வரும் புது ரூல்ஸ்..!!




புதுடெல்லி, ஜூலை. 30–

ஒவ்வொரு மாதத்தின் தொடக்கத்திலும் அரசு மற்றும் நிதித் துறை சார்ந்த பல்வேறு முக்கிய விதிமுறைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்படுவது வழக்கம். அந்த வகையில், பிறக்கவிருக்கும் ஆகஸ்ட் 1–ஆம் தேதி முதல் ரயில்வே முன்பதிவு, வருமான வரி தாக்கல், சமையல் எரிவாயு விலை மற்றும் வங்கிச் சேவைகள் எனப் பல துறைகளில் புதிய நடைமுறைகள் அமலுக்கு வரவுள்ளன. இந்த மாற்றங்கள் சாமானிய மக்களின் அன்றாட வாழ்க்கை முறையிலும், மாதாந்திர குடும்ப வரவு செலவுத் திட்டத்திலும் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால், அதுகுறி த்த விழிப்புணர்வு அவசியமாகிறது.

**தட்கல் முன்பதிவில் புதிய டோக்கன் முறை:**

ரயில்வே பயணச் சீட்டு முன்பதிவு மையங்களில் நிலவும் அதிகளவிலான கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்தும் நோக்கில், புதிய டோக்கன் முறையை இந்திய ரயில்வே அறிமுகப்படுத்துகிறது. தட்கல் முன்பதிவு தொடங்கும் நேரத்திற்கு ஏற்ப இந்த டோக்கன்கள் விநியோகிக்கப்படும் என்பதால், பயணிகள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்கும் சிரமம் பெருமளவு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. முதற்கட்டமாக மேற்கு மத்திய ரயில்வே மண்டலத்தில் சோதனை முறையில் தொடங்கப்படும் இந்த திட்டம், பெறப்படும் வரவேற்பைப் பொறுத்து நாடு முழுவதும் உள்ள எஞ்சிய 18 ரயில்வே மண்டலங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட உள்ளது.

**எல்.பி.ஜி சிலிண்டர் விலை:**

அரசு பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் சர்வதேசச் சந்தை நிலவரத்திற்கு ஏற்ப, மாதத்தின் முதல் நாளில் சமையல் எரிவாயு உருளைகளின் விலையை மாற்றியமைப்பது வழக்கம். அதன்படி, ஆகஸ்ட் 1–ஆம் தேதியன்றும் எல்.பி.ஜி சிலிண்டர்களின் புதிய விலை நிலவரம் அறிவிக்கப்பட உள்ளது. வணிக பயன்பாடு மற்றும் வீட்டு உபயோக சிலிண்டர்களின் விலை உயருமா அல்லது குறையுமா என்பது அன்றைய தினம் வெளியாகும் அதிகாரப்பூர்வ அறிவிப்பின் மூலமே தெரியவரும்.

**வருமான வரி தாக்கல் அபராதம்:**

நடப்பு நிதியாண்டிற்கான வருமான வரி கணக்கு தாக்கல் (ITR) செய்வதற்கான அவகாசம் ஜூலை 31–ஆம் தேதியுடன் நிறைவடைகிறது. அந்தக் கெடுவுக்குள் கணக்கு தாக்கல் செய்யத் தவறுபவர்கள், ஆகஸ்ட் 1 முதல் அபராதக் கட்டணம் செலுத்த நேரிடும். மேலும், தாமதத் தாக்கலுக்கான கூடுதல் சட்ட விதிகளுக்கும் அவர்கள் உட்பட வேண்டியிருக்கும் என்பதால், உரிய நேரத்திற்குள் தாக்கல் செய்வது அவசியமாகிறது.

**சி.கே.ஒய்.சி 2.0 (CKYC 2.0) அமலாக்கம்:**

ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட புதிய 'சி.கே.ஒய்.சி 2.0' நடைமுறை நாடு முழுவதும் படிப்படியாக நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகிறது. இதன் மூலம் வங்கி கணக்குகள் தொடங்குவது மற்றும் நிதி நிறுவனங்களில் வாடிக்கையாளர்களின் கே.ஒய்.சி (KYC) சரிபார்ப்புச் செயல்பாடுகளை மிகவும் எளிமையாகவும் விரைவாகவும் முடிப்பதே இதன் முதன்மை நோக்கமாகும்.

**வங்கி மற்றும் கிரெடிட் கார்டு விதிமுறைகள்:**

பல்வேறு முன்னணி வங்கிகள் தங்களது கிரெடிட் கார்டு பயன்பாட்டிற்கான ரிவார்டு புள்ளிகள், தாமதக் கட்டணங்கள் மற்றும் சேவைப் படிவங்களில் மாற்றங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளன. இந்த மாற்றங்கள் வங்கிக்கு வங்கி வேறுபடக்கூடும் என்பதால், வாடிக்கையாளர்கள் தங்களின் கணக்கு வைத்துள்ள வங்கிகளின் அதிகாரப்பூர்வ அறிவிப்புகளை சரிபார்த்துக் கொள்வது அவசியமாகும்.

தலையங்கம்

# மதுரை மணி

வியாழக்கிழமை 30.07.2026

விசுவாவசு தமிழ் வருடம்

ஆடி மாதம் 14-ம் தேதி

## வங்கிகள் கல்லா கட்டின..!




வங்கி கணக்குகளில் குறைந்தபட்ச இருப்புத் தொகை (Minimum Average Balance – MAB) பராமரிக்காத வாடிக்கையாளர்களிடம் இருந்து, கடந்த 4 ஆண்டுகளில் ரூ.26,170 கோடிக்கும் மேல் அபராதமாக வங்கிகள் வசூலித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில் மத்திய நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி அளித்த தகவலின்படி, 2025–26 நிதியாண்டில் மட்டும் ரூ.7,086.63 கோடி அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது. இதில் தனியார் வங்கிகள் ரூ.4,948.71 கோடியும், பொதுத்துறை வங்கிகள் ரூ.2,137.92 கோடியும் வசூலித்துள்ளன.

தனியார் வங்கிகளில் எச்டிஎஃப்சி வங்கி ரூ.1,798.14 கோடி மற்றும் ஆக்சிஸ் வங்கி ரூ.1,081.33 கோடி அபராதம் வசூலித்து முன்னிலையில் உள்ளன. பொதுத்துறை வங்கிகளில் எஸ்பிஐ ரூ.477.27 கோடி வசூலித்துள்ளது. எனினும், இது நடப்பு (Current) கணக்குகளுக்கான அபராதம் மட்டுமே என்றும், சேமிப்பு கணக்குகளுக்கான அபராதத்தை எஸ்பிஐ 2020–ம் ஆண்டிலேயே ரத்து செய்துவிட்டதாக அரசு தெரிவித்துள்ளது.

மேலும், BSBDA மற்றும் பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா (PMJDY) திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட 73 கோடிக்கும் மேற்பட்ட கணக்குகளுக்கு மினிமம் பேலன்ஸ் அபராதம் விதிக்கப்படுவதில்லை. தற்போது 12 பொதுத்துறை வங்கிகளில் 10 வங்கிகள் சேமிப்பு கணக்குகளுக்கான இந்த அபராதத்தை முழுமையாக நீக்கியுள்ளன. எனவே, தனியார் வங்கிகள் மற்றும் நடப்புக் கணக்கு வைத்திருப்போர் குறைந்தபட்ச இருப்புத் தொகையை பராமரிக்க வேண்டும் என அரசு அறிவுறுத்தியுள்ளது.

## மீனாட்சி கோயில் நில விவகாரம்: விஎச்பி வலியுறுத்தல்!

மதுரை, ஜூலை. 30–

“மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு சொந்தமான ரூ.60 கோடி மதிப்புள்ள நில அபகரிப்பு விவகாரத்தில் பின்னணியில் உள்ள முக்கிய குற்றவாளிகளை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறினால் போராட்டம் நடத்தப்படும்” என விஸ்வ ஹிந்து பரிசத் மாநில இணை பொதுச் செயலாளர் வழக்கறிஞர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். மதுரையில் அவர் கூறியதாவது: முந்தைய இந்து விரோத திமுக ஆட்சியில் கோயில் சொத்துக்கள் சூறையாடப்பட்டது. ஒவ்வொன்றாக வெளிவந்து கொண்டுள்ளது. பழநி தண்டபாணி சுவாமி மடத்துக்கு சொந்தமான ரூ.100 கோடி மதிப்புள்ள நிலத்தை தனியாருக்கு தாரை வார்த்ததில் முக்கிய நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது மதுரை மீனாட்சி அம்மன் கோயில் தினசரி பூஜை நடத்த அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட்ட ரூ.60 கோடி மதிப்புள்ள நிலம் முந்தைய திமுக ஆட்சியில் தனியாருக்கு தாரைவாக்கப்பட்ட விவகாரம் வெளியில் வந்துள்ளது. இதுபோல இன்னும் எத்தனை கோயில்களில் முந்தைய இந்து விரோத திமுக ஆட்சி காலத்தில் கோயில் நிலங்கள் தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டது என்று தெரியவில்லை.

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் நிலத்தை தனியாருக்கு தாரை வார்த்ததில் யார் முக்கிய குற்றவாளிகளையும் கண்டறிந்து கைது செய்ய வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் கோயில் நிலங்கள் சூறையாடப்படாது.

தமிழகத்தில் ஆட்சிக்கு வந்துள்ள தவெக அரசும் முந்தைய திமுக அரசு போல இல்லாமல் தமிழகத்தில் உள்ள கோயில்களுக்கு சொந்தமான நிலங்கள் அதனுடைய தற்போது நிலை, வேறு கோயில் நிலங்கள் தாரைவாக்கப்பட்டுள்ளனவா என்பது குறித்து ஐஏஎஸ் அதிகாரி, மடாதிபதி தலைமையில் ஆன்மிக பக்தர்கள் கொண்ட உயர்மட்ட குழுவை அமைத்து விசாரிக்க வேண்டும். தவறினால் இந்து அறநிலைத்துறை அலுவலகங்கள் முன்பாக போராட்டம் நடத்தப்படும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.




## கூகுள் பே, போன்பே புதிய விதிமுறை அமல்?



UPI பயனர்களின் தனியுரிமையை பாதுகாக்க, செப்டம்பர் 4 முதல் Google Pay, PhonePe, Paytm உள்ளிட்ட அனைத்து UPI செயலிகளிலும் புதிய விதிகள் அமலுக்கு வருகின்றன.

பணம் அனுப்பும்போதும் பெறும்போதும் பயனர்களின் முழு மொபைல் எண் காட்டப்படாது; கடைசி 4 இலக்கங்கள் மட்டுமே தெரியும். QR பரிவர்த்தனைகளிலும் இதே நடைமுறை பின்பற்றப்படும். மேலும், username@bank போன்ற UPI பயனர் பெயர்களை இயல்புநிலையாக வழங்க NPCI அறிவுறுத்தியுள்ளது. DPDP சட்டத்தின்படி தனியுரிமையை வலுப்படுத்தவும், தேவையற்ற அழைப்புகள், மோசடி முயற்சிகள் மற்றும் குறிப்பாக பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தவும் இந்த மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.

## மதுரை ரயில் நிலைய மோதல்: டிக்கெட் பரிசோதகர் சஸ்பெண்ட்!

மதுரை, ஜூலை. 30–

மதுரை ரயில் நிலையத்தில் பயணி மற்றும் டிக்கெட் பரிசோதகர் இடையே ஏற்பட்ட மோதல் தொடர்பாக தெற்கு ரயில்வே உடனடி நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜூலை 27–ஆம் தேதி செங்கோட்டை சென்னை எழும்பூர் எக்ஸ்பிரஸ் ரயிலில் டிக்கெட் பரிசோதனையின்போது, டிக்கெட் இல்லாமல் பயணம் செய்த பயணியிடம் கட்டணம் செலுத்துமாறு கேட்டபோது அவர் மறுத்ததுடன், டிக்கெட் பரிசோதகரிடம் தகாத வார்த்தைகளில் பேசியதாக கூறப்படுகிறது. மதுரை வந்தபின், மதுவின் தாக்கத்தில் இருந்ததாக சந்தேகிக்கப்பட்ட அந்த பயணி, ரயில்வே பாதுகாப்புப் படை (RPF) உதவியுடன் இறக்கப்பட்டார்.

அப்போது மீண்டும் கட்டணம் செலுத்த மறுத்ததுடன், டிக்கெட் பரிசோதகரை தள்ளியதால் இருவருக்கும் உடல் ரீதியான மோதல் ஏற்பட்டது.

இந்தச் சம்பவத்தை தீவிரமாக எடுத்துக்கொண்ட தெற்கு ரயில்வே, சம்பந்தப்பட்ட டிக்கெட் பரிசோதகரை ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் பணியிடை நீக்கம் (சஸ்பெண்ட்) செய்துள்ளது. அதிகாரி தலைமையில் விசாரணை நடத்தப்பட்டுள்ள நிலையில், பயணியிடம் விளக்கம் பெற முயன்றும் தொடர்புகொள்ள முடியவில்லை. மேலும், எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க, டிக்கெட் பரிசோதகர்களுக்கு பயணிகளைக் கையாளுதல் மற்றும் மோதல் மேலாண்மை தொடர்பான சிறப்பு பயிற்சி அளிக்கப்படும் என தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.



இராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோவில் ஊராட்சி ஒன்றியம், வாணியவல்லம் ஊராட்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சிவகுரு பிரபாகரன் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளை நடவு செய்தார்.

## மத்திய அரசு ஊழியர்களுக்கு சம்பள ஜாக்பாட்?




புதுடெல்லி, ஜூலை. 30–

மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் மத்தியில் 8–வது ஊதியக் குழு குறித்த எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. குறிப்பாக, Fitment Factor 2.57 ஆக நிர்ணயிக்கப்பட்டால், ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தில் கணிசமான உயர்வு ஏற்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதே 2.57 ஃபிட்மெண்ட் ஃபேக்டர் அமல்படுத்தப்பட்டால், குரூப்–டி மற்றும் எம்.டி.எஸ். ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் ரூ.18,000–லிருந்து ரூ.46,260 ஆக உயரும். பட்டதாரி ஆசிரியர்களின் (Level–7) அடிப்படைச் சம்பளம் ரூ.44,900–லிருந்து ரூ.1.15 லட்சம் வரை உயரக்கூடும். அதேபோல், Level–10 அதிகாரிகளின் அடிப்படைச் சம்பளம் ரூ.56,100–லிருந்து ரூ.1.44 லட்சம் வரை அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.

புதிய ஊதிய அமைப்பு அமலுக்கு வந்ததும், அகவிலைப்படி (DA) 0% ஆக மாற்றப்பட்டு, புதிய அடிப்படைச் சம்பளத்தின் அடிப்படையில் வீட்டு வாடகைப்படி (HRA) மற்றும் போக்குவரத்துப் படி (TA) கணக்கிடப்படும்.

நிதி ஆய்வாளர்கள் 1.92 முதல் 2.86 வரை ஃபிட்மெண்ட் ஃபேக்டர் இருக்கலாம் என மதிப்பிட்டுள்ள நிலையில், 2.57 அமல்படுத்தப்பட்டால் ஊழியர்களின் கையில் கிடைக்கும் மொத்தச் சம்பளம் 20%30% வரை உயரக்கூடும் என கணிக்கப்படுகிறது. இருப்பினும், இவை அனைத்தும் கணிப்புகள் மட்டுமே; 8–வது ஊதியக் குழுவின் அதிகாரப்பூர்வ அறிக்கை வெளியான பிறகே இறுதி விவரங்கள் உறுதியாகும்.

## குற்றால அருவிகளில் குளிக்கத் தடை!



தென்காசி, ஜூலை. 30–

திடீர் வெள்ளப்பெருக்கு காரணமாக குற்றால அருவிகளில் குளிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா பயணிகள் நலன் கருதி மெயின் அருவி, ஐந்தருவிகளில் குளிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## அண்ணாமலையின் புதிய அரசியல் அஸ்திரம்..!

சென்னை, ஜூலை. 30–

‘We The Leaders’ என்ற பிரத்யேக செயலியை தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை அறிமுகப்படுத்தி, சமூக மாற்றத்தை உருவாக்கும் பயணத்தில் பொதுமக்கள் இணைய அழைப்பு விடுத்துள்ளார். இதுகுறித்த விளக்க வீடியோவை தனது ‘எக்ஸ்’ தளத்தில் வெளியிட்ட அவர், செயலியை பதிவிறக்கம் செய்து தங்கள் பகுதியில் மாற்றத்தை உருவாக்கும் முயற்சியில் பங்கேற்குமாறு கேட்டுக்கொண்டார்.




வீடியோவில், கூகுள் பிளே ஸ்டோர் அல்லது ஆப் ஸ்டோரில் “We The Lead–ers” எனத் தேடி செயலியை பதிவிறக்கம் செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே உறுப்பினர்களாக உள்ளவர்கள் Sign–in மூலம் உள்நுழையலாம். புதிய பயனர்கள் Join என்பதைத் தேர்வு செய்து, பெயர், பிறந்த தேதி, மாநிலம் மற்றும் சட்டப்பேரவைத் தொகுதி உள்ளிட்ட விவரங்களை பதிவு செய்ய வேண்டும். அதன் பின்னர் 4 முக்கிய கேள்விகளுக்கு ஆம் அல்லது இல்லை என பதிலளிக்கலாம்; விருப்பமில்லையெனில் அந்தக் கேள்விகளைத் தவிர்க்கவும் முடியும். பதிவு நிறைவடைந்ததும் அண்ணாமலையின் வரவேற்பு வீடியோ தோன்றும் என செயலியின் பயன்பாட்டு முறையும் விளக்கப்பட்டுள்ளது.

## வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கு குட் நியூஸ்!


சென்னை, ஜூலை. 30–

உயர்கல்வி, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் குடியேற்றம் தொடர்பான தேவைகளுக்காக கல்விச் சான்றிதழ்கள் மற்றும் தனிப்பட்ட ஆவணங்களுக்கு சான்றொப்பம் (Attestation) மற்றும் அங்கீகாரம் (Apos–tille)வழங்கும் சேவையை தமிழக அரசின் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (OMCL) வழங்கி வருவதாக அறிவித்துள்ளது.

சென்னை கிண்டி தொழிற்பேட்டை பேருந்து நிலையம் அருகே உள்ள ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் OMCL, மாணவர்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நாடுவோருக்கு இச்சேவையை வழங்குகிறது. நேரடியாக OMCL–ஐ அணுகும் விண்ணப்பதாரர்களிடம், ஒரு சான்றிதழுக்கு ரூ.900 மற்றும் 18% ஜிஎஸ்டி மட்டுமே கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு, நம்பகத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் இச்சேவை வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



எனவே, சான்றொப்பம் மற்றும் அங்கீகார சேவைகளைப் பெற விரும்பும் மாணவர்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு நாடுவோர் மற்றும் பொதுமக்கள் இடைத்தரகர்களைத் தவிர்த்து நேரடியாக OM–CL–ஐ அணுகிபயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் விவரங்களை www.omcmanpower.tn.gov.in என்ற இணையதளத்திலும், 9566239685, 6379179200, 044–22502267 ஆகிய தொலைபேசி எண்களிலும் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளலாம்.



## 12 ராசிகளுக்கும் பெஸ்ட் மேட்ச்... எது?



**மேஷ ராசிக்கான திருமண பொருத்தம்**

ஜோதிட சாஸ்திரத்தின் படி, மேஷ ராசியினருக்கு கும்ப ராசி சிறந்த வாழ்க்கைத் துணையாக கருதப்படுகிறது. இருவருக்கும் நல்ல புரிதல் மற்றும் எண்ண ஒற்றுமை இருப்பதால் திருமண வாழ்க்கை மகிழ்ச்சியாக அமையும்.

**ரிஷப ராசிக்கான திருமண பொருத்தம்**

ரிஷப ராசியினருக்கு கன்னி, கடகம், மகரம், விருச்சிகம் ஆகிய ராசியினர் பொருத்தமானவர்கள். பொறுமை மற்றும் குடும்பப் பாசம் அதிகம் இருப்பதால் உறவு வலுவாக இருக்கும்.

**மிதுன ராசிக்கான திருமண பொருத்தம்**

மிதுன ராசியினருக்கு கும்பம் மற்றும் துலாம் சிறந்த பொருத்தம். கருத்துப் பரிமாற்றமும், புரிதலும் அதிகமாக இருப்பதால் இணக்கமான வாழ்க்கை அமையும்.

**கடக ராசிக்கான திருமண பொருத்தம்**

கடக ராசியினருக்கு மீனம் மற்றும் விருச்சிகம் நல்ல வாழ்க்கைத் துணையாக அமையலாம். உணர்வுபூர்வமான பிணைப்பு மற்றும் அன்பு நிறைந்த உறவு உருவாகும்.

**சிம்ம ராசிக்கான திருமண பொருத்தம்**

சிம்ம ராசியினருக்கு மேஷம், தனுசு, சிம்மம் ஆகிய ராசிகள் பொருத்தமானவை. குறிப்பாக மேஷ ராசியுடன் சிறந்த புரிதல் ஏற்படும் என ஜோதிடம் கூறுகிறது.

**கன்னி ராசிக்கான திருமண பொருத்தம்**

கன்னி ராசியினருக்கு ரிஷபம், கடகம், விருச்சிகம், மகரம் ஆகிய ராசிகள் ஏற்றவை. நம்பிக்கை மற்றும் பொறுப்புணர்வு காரணமாக உறவு நிலைத்திருக்கும்.

**துலாம் ராசிக்கான திருமண பொருத்தம்**

துலாம் ராசியினருக்கு ரிஷபம், தனுசு, மீனம் சிறந்த வாழ்க்கைத் துணையாக கருதப்படுகின்றனர். நல்ல புரிதல் இருந்தாலும், சிறிய கருத்து வேறுபாடுகள் அவ்வப்போது ஏற்படலாம்.

**விருச்சிக ராசிக்கான திருமண பொருத்தம்**

விருச்சிக ராசியினருக்கு ரிஷபம், கடகம், மகரம், மீனம் ஆகிய ராசிகள் பொருத்தமானவை. நம்பிக்கை மற்றும் அன்பு இந்த உறவை வலுப்படுத்தும்.

**தனுசு ராசிக்கான திருமண பொருத்தம்**

தனுசு ராசியினருக்கு மேஷம், சிம்மம், தனுசு ஆகிய ராசிகள் சிறந்த பொருத்தம். இருவருக்கும் சுதந்திரமான சிந்தனையும் நல்ல புரிதலும் இருக்கும்.

**மகர ராசிக்கான திருமண பொருத்தம்**

மகர ராசியினருக்கு கன்னி, ரிஷபம், மகரம் ஆகிய ராசியினர் வாழ்க்கைத் துணையாக ஏற்றவர்கள். குடும்பப் பொறுப்பை பகிர்ந்து கொண்டு சுமுகமாக வாழ்வார்கள்.

**கும்ப ராசிக்கான திருமண பொருத்தம்**

கும்ப ராசியினருக்கு மிதுனம், துலாம், தனுசு ஆகிய ராசிகள் நல்ல பொருத்தம். நட்பு, புரிதல் மற்றும் மகிழ்ச்சி நிறைந்த திருமண வாழ்க்கை அமையும்.

**மீன ராசிக்கான திருமண பொருத்தம்**

மீன ராசியினருக்கு கடகம், விருச்சிகம், ரிஷபம், மகரம் ஆகிய ராசிகள் சிறந்த வாழ்க்கைத் துணையாக கருதப்படுகின்றனர். அன்பு, பாசம் மற்றும் நீடித்த குடும்ப வாழ்க்கைக்கு இந்த இணைப்பு ஏற்றதாக ஜோதிடத்தில் குறிப்பிடப்படுகிறது.

## 4 முன்னாள் எம்எல்ஏக்கள் வழக்கு: இபிஎஸ் ஆஜர் தேதி ஆக.4-க்கு மாற்றம்!

சென்னை, ஜூலை. 30–

அதிமுகவில் இருந்து விலகி தவெகவில் இணைந்த 4 முன்னாள் எம்எல்ஏக்கள் தொடர்பான கட்சித் தாவல் தடைச் சட்ட விசாரணையில், அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் மற்றும் 4 முன்னாள் எம்எல்ஏக்கள் இன்று ஆஜராக வேண்டியிருந்தது. நிர்வாக காரணங்களால் விசாரணை ஒத்திவைக்கப்பட்டு, அனைவரும் ஆகஸ்ட் 4–ம் தேதி ஆஜராகுமாறு சட்டப்பேரவை செயலர் அறிவித்துள்ளார்.

## பழனியில் தொழில் அதிபர் ஜே.பி.சரவணன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் எழுச்சி பாசறை மாநிலச் செயலாளராக நியமனம்!



பழனி, ஜூலை 30–

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் பழனி மாவட்ட தலைவரும், பழனி தொழில் அதிபருமான ஜே பி சரவணன், சமீபத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியில் சேர்ந்தார். இந்நிலையில் அவரை இளஞ்சிறுத்தைகள் எழுச்சி பாசறையின் மாநிலச் செயலாளராக, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் அறிவித்துள்ளார்



பெருந்துறை பணிக்கம்பாளையம் பகுதியில் பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த ஹசன் ஹபீப், ராஜூ காஜி, கோபி சர்தார், ராஜா உசேன், ஆகிய நான்கு பேர் உரிய அனுமதியின்றி தங்கி இருந்து தனியார் நிறுவனங்களில் வேலை செய்து வந்துள்ளனர். இதுகுறித்து பெருந்துறை காவல்துறையினருக்கு தகவல் கிடைத்ததும் உடனடியாக 4 பேரையும் கைது செய்து திருச்சி சிறப்பு முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### உயரமான இடத்தில் நிற்கும்போது கால் நடுங்குதா?



உயரமான கட்டிடம், பாலம் அல்லது மலை விளிம்பில் நிற்கும்போது கால்கள் நடுங்குவது, பாதங்களில் ஜிவ்வென்ற உணர்வு ஏற்படுவது பலருக்கும் இருக்கும். இது பயத்தால் மட்டுமல்ல; உடலை பாதுகாக்க மூளை செயல்படுத்தும் இயற்கையான பாதுகாப்பு அமைப்பின் ஒரு பகுதியாகும். உயரமான இடங்களில் உடலின் சமநிலையை பராமரிக்க மூளை, கண்கள், காதுகளின் உட்பகுதி மற்றும் பாதங்களில் உள்ள நரம்பு உணர்வுகளிடமிருந்து வரும் தகவல்களை மிகத் தீவிரமாக கண்காணிக்கிறது. இதனால் பாதங்களில் உள்ள உணர்வு செல்கள் அதிக விழிப்புடன் செயல்பட்டு, சிறிய அசைவையும் மூளைக்கு தெரிவிக்கின்றன. அதுவே கால்களில் நடுக்கம் அல்லது கூச்சம் போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது. எனவே, அவ்வப்போது இவ்வாறு உணர்வது பெரும்பாலும் இயல்பான உடல் செயல்பாடாகவே கருதப்படுகிறது. ஆனால், உயரமில்லாத இடங்களிலும் தொடர்ந்து தலைச்சுற்றல், சமநிலை இழப்பு அல்லது அடிக்கடி கால் நடுக்கம் ஏற்பட்டால், அது வேறு உடல்நலப் பிரச்னையின் அறிகுறியாக இருக்கலாம். அத்தகைய நிலையில் மருத்துவரை அணுகி பரிசோதனை செய்து கொள்வது அவசியம்.

## சினிமா துளிகள்..!

### வசூல் வேட்டையில் "ஜனநாயகன்" ... !




தமிழகம் மட்டுமின்றி இந்தியா மற்றும் வெளிநாடுகளிலும் 'ஜனநாயகன்' திரைப்படத்திற்கு சிறப்பான வரவேற்பு கிடைத்து வருகிறது. முதல் நாளிலேயே ரூ.80 கோடிக்கும் அதிகமான வசூலை ஈட்டியது.

இந்த நிலையில், 'ஜனநாயகன்' திரைப்படம் வெளியான முதல் வாரத்தில் (7 நாட்களில்) உலகம் முழுவதும் ரூ.255.63 கோடி வசூல் செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதாவது, இந்திய அளவில் ரூ.174.63 கோடியும், வெளிநாடுகளில் ரூ.81 கோடியும் வசூல் செய்துள்ளது. ரசிகர்கள் தொடர் ஆதரவு கொடுத்து வருவதால், வரும் நாட்களில் படத்தின் வசூல் மேலும் அதிகரிக்கும் என்று திரையுலக வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

### ராவணனாக மிரட்டும் யாஷ் - வெளியானது 'ராமாயணா' டிரெய்லர்!



இந்திய ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட 'ராமாயணா' படத்தின் டிரெய்லர் இன்று (ஜூலை.30ம் தேதி) அதிகாலை 4.15 மணிக்கு பிரம்ம முகூர்த்தத்தில் வெளியாகி உள்ளது. முன்னதாக இந்த டிரெய்லர் ஜூலை 24 ஆம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், சில காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டு தற்பொழுது வெளியாகி உள்ளது. ரமேஷ் திவாரி இயக்கத்தில், ராமராக ரன்பீர் கபூர், சீதையாக சாய் பல்லவி, மற்றும் இராவணனாக யஷ் நடித்துள்ள வரலாற்றுப் படம் ராமாயணா. அனுமன் கதாபாத்திரத்தில் சன்னி தியோல் நடித்துள்ளார்.

ஆஸ்கார் விருது பெற்ற ஏ.ஆர். ரஹ்மான் மற்றும் ஹான்ஸ் ஜிம்மர் இணைந்து இப்படத்திற்கு இசையமைத்துள்ளனர். இரண்டு பாகங்களாக உருவாகும் இந்த இதிகாசத் திரைப்படத்தின் முதல் பாகம், 2026 தீபாவளி பண்டிகையை முன்னிட்டு திரையரங்குகளில் வெளியாகத் திட்டமிடப்பட்டுள்ளது. 4.09 நிமிடங்கள் நீளமுள்ள இந்த டிரெய்லர், ஆரம்பம் முதல் இறுதி வரை விறுவிறுப்பாக உள்ளது.

மூன்று உலகங்களுக்கும் தானே அரசன் என்று பெருமையுடன் அறிவித்துக்கொள்ளும் ராவணனின் (யாஷ்) உரையாடலுடன் டிரெய்லர் தொடங்குகிறது.

ராமரின் (ரன்பீர்) குழந்தைப் பருவம், அசுரர்களுடனான போர்கள் மற்றும் சீதையுடனான திருமணம் போன்ற காட்சிகள் இதில் காட்டப்பட்டுள்ளன.

அதன்பிறகு, 14 வருட வனவாசம், சீதாராமன் லட்சுமணனுடன் வனத்திற்குச் செல்வது, மற்றும் ராவணன் சீதையைக் கடத்துவது போன்ற முக்கியக் காட்சிகளுடன் இந்த டிரெய்லர் கதையின் மீதான ஆர்வத்தை அதிகரித்தது.

குறிப்பாக, விஷுவல் எபெக்ட்ஸ் மற்றும் பின்னணி இசை ஆகியவை படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது.

# பள்ளிகளில் மத நிகழ்ச்சி நடத்தக்கூடாது - அரசு எச்சரிக்கை!



சென்னை, ஜூலை. 30–

தமிழகத்தில், அரசு பள்ளி வளாகங்கள் மற்றும் வகுப்பறைகளில், த.வெ.க., நிர்வாகிகள் 'ரீல்ஸ்' எடுப்பது சர்ச்சையானது.

இதை தொடர்ந்து, பள்ளி வளாகத்தில் எந்த கட்சியினரும் அரசியல் சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபடக்கூடாது என, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் உத்தரவிட்டார். இது தொடர்பாக, பள்ளிக்கல்வித் துறை வெளியிட்ட அரசாணையில் கூறியிருப்பதாவது:– தமிழகத்தில் உள்ள அனைத்து வகை பள்ளிகளின் வளாகத்தில், அரசியல் கட்சிகள், மத அமைப்புகள், ஜாதி சங்கங்கள் நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் சார்பில் நடத்த தடை விதிக்கப்படுகிறது. பள்ளி விடுமுறை நாட்களிலும், இது பொருந்தும். எந்த காரணத்தை கொண்டும், பள்ளி வளாகத்தை அரசியல் அல்லது மத செயல்பாடுகளுக்கு வாடகைக்கோ அல்லது இலவசமாகவோ வழங்கக் கூடாது. அரசு நலத்திட்ட விழாக்கள் மற்றும் அரசின் அதிகாரப்பூர்வ பணிகளுக்கு மட்டுமே பள்ளி வளாகத்தை பயன்படுத்த வேண்டும். பள்ளி சுவர் மற்றும் வளாகத்தில், அரசியல், மதம் சார்ந்த சுவரொட்டிகள், விளம்பரங்கள், கொடிக் கம்பங்கள், சின்னங்கள் வைப்பது முற்றிலும் தடை செய்யப்படுகிறது.

பள்ளி தலைமை ஆசிரியர்கள் அல்லது பள்ளி நிர்வாகிகள், அரசாணையை மீறி, அரசியல், மத நிகழ்வுகளுக்கு அனுமதி அளித்தால், சம்பந்தப்பட்டவர்கள் மீது உடனடியாக ஒழுங்கு நடவடிக்கை, சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மின் கட்டண உயர்வு புகார்: 3.70 லட்சம் வீடுகளில் அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்ய திட்டம்!

சென்னை, ஜூலை. 30–

தமிழகத்தில் ஜூலை மாத மின் கட்டண உயர்வு தொடர்பாக பொதுமக்களிடம் இருந்து அதிக அளவில் புகார்கள் வந்தது. இதையடுத்து, மின் நுகர்வு கணக்கீட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆய்வு செய்ய தமிழ்நாடு மின்சாரவாரியம் முடிவு செய்துள்ளது. இதற்காக மூத்த அதிகாரிகள் மூலம் மறு ஆய்வு நடத்த உத்தரவிடப்பட்டு உள்ளது.

கடந்த மே மாதம் வழங்கப்பட்ட மின் கட்டணத்துடன் ஒப்பிடும்போது, ஜூலை மாதம் மின் நுகர்வில் அதிக மாற்றம் காணப்பட்ட 3.70 லட்சம் மின் இணைப்புகளில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது. இந்த ஆய்வை ஆகஸ்ட் 7–ந் தேதிக்குள் முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

இந்த ஆய்வில் தலைமைப் பொறியாளர் 25 இணைப்புகளையும், மேற்பார்வைப் பொறியாளர் 50 இணைப்புகளையும், கோட்டப்பொறியாளர் 75 இணைப்புகளையும் ஆய்வு செய்ய வேண்டும்.

அதேபோல், துணை நிதி கட்டுப்பாட்டாளர் 50, உதவி கோட்டப் பொறியாளர் 100, வருவாய் புலனாய்வு பிரிவு கணக்கு அலுவலர் 150, மூத்த மதிப்பீட்டு அலுவலர் 150, வருவாய் பிரிவு உதவி கணக்கு அலுவலர் 100, மதிப்பீட்டு அலுவலர் 150 மற்றும் உதவிப் பொறியாளர் 100 மின் இணைப்புகளை ஆய்வு செய்ய வேண்டும்.

இந்த ஆய்வின்போது ஏதேனும் தவறுகள் கண்டறியப்பட்டால், அவற்றை உடனடியாக சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் வி.அருண் ராய் தெரிவித்துள்ளார்.

# கர்நாடகாவில் 7,000-க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்களுக்கு எச்.ஐ.வி. தொற்று உறுதி!




பெங்களூரு, ஜூலை. 30–

கர்நாடகாவில் 18 முதல் 25 வயதுக்குட்பட்ட கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் என 7,000–க்கும் மேற்பட்டோருக்கு எச்.ஐ.வி. தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது, பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சி, வாழ்க்கைமுறை மாற்றங்கள் மற்றும் போதிய விழிப்புணர்வின்மை காரணமாக இளம் வயதினரிடையே எச்.ஐ.வி பரவல் அதிகரித்துள்ளதாக மாநில சுகாதார வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர். வீட்டை விட்டு வெளியேறி கல்லூரி விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களிடையே போதிய பாதுகாப்பு விழிப்புணர்வு இல்லாததால், சில குறிப்பிட்ட விடுதிகளில் அதிக அளவிலான எச்.ஐ.வி. தொற்று பரவியுள்ளது. இந்த விவகாரம் அம்மாநிலத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், நோய்த்தொற்றை தடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அனைத்துக் கல்லூரிகளிலும் சிறப்பு மருத்துவ மற்றும் பரிசோதனை முகாம்களை நடத்த மாநில அரசு உத்தரவிட்டுள்ளது. இருப்பினும், தனிநபர்களின் ஒப்புதல் இன்றி எந்தவொரு பரிசோதனைக்கும் இளைஞர்களை உட்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது எனவும் திட்டவட்டமாக கர்நாடக மாநில அரசு தெரிவித்துள்ளது.

# டாஸ்மாக்: கைதாகிறாரா செந்தில் பாலாஜி...?



சென்னை, ஜூலை. 30–

டாஸ்மாக் நிறுவனத்தில் நடைபெற்ற பல கோடி ரூபாய் முறைகேடு தொடர்பான வழக்கில், திமுக முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தாக்கல் செய்த முன்ஜாமீன் மனுவை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது. இதனால் அவர் எந்நேரமும் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்படலாம் என்ற பரபரப்பான சூழல் உருவாகி யுள்ளது.

**மனு தள்ளுபடி:**

முன்ஜாமீன் கோரி செந்தில் பாலாஜி தாக்கல் செய்த மனுவை விசாரித்த 'நீதிபதி ஜி.கே.இளந்திரையன்', மனுவைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார். விசாரணையின் போது, "டாஸ்மாக் நிறுவனத்தில் பெரும் முறைகேடு நடந்திருப்பதற்கும், அதன் மூலம் அரசு கருவூலத்திற்குப் பலத்த நிதி இழப்பு ஏற்பட்டிருப்பதற்கும் போதிய ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், குற்றம்சாட்டப்பட்டவர் தனது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்ததற்கான ஆரம்பக்கட்ட முகாந்திரங்கள் தெளிவாக உள்ளன." இந்நிலையில், எதனடிப்படையில் முன்ஜாமீன் போருகிறீர்கள் என கேள்வி எழுப்பினார்.

**11 பிரிவுகளின் கீழ் எஃப்.ஐ.ஆர் பதிவு:**

தமிழக அரசின் கீழ் இயங்கும் டாஸ்மாக் நிறுவனம் மூலம் 5,380 மதுக் கடைகளும், 3,240 மதுக் கூடங்களும் (பார்கள்) இயங்கி வருகின்றன. 2021 முதல் 2025 வரை மது விற்பனை உயர்ந்தபோதிலும், அரசுக்கான வருவாய் கணிசமாகக் குறைந்ததாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதனையடுத்து, தமிழக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தீவிர விசாரணை நடத்தி, 11 பிரிவுகளின் கீழ் வழக்கைப் பதிவு செய்தது. இந்த வழக்கில் செந்தில் பாலாஜி உட்பட '7 பேர்' குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**போலி டெண்டர் மற்றும் கூட்டுச்சதி:**

2021–ஆம் ஆண்டில் கோவை, நீலகிரி, திருப்பூர், ஈரோடு, நாமக்கல் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் 857 டாஸ்மாக் பார்களுக்கு டெண்டர் கோரப்பட்டதில் பெரும் முறைகேடு நடந்துள்ளது. டெண்டரில் பங்கேற்றவர்கள் ஒரே வங்கிக் கிளையிலிருந்து தொடர்ச்சியான எண்களில் வரைவு காசோலைகளை பிணையத் தொகையாகச் செலுத்தியதன் மூலம் கூட்டுச்சதி அம்பலமாகியுள்ளது.

**பாட்டில் சேகரிப்பு முறைகேடு:**

45 கிடங்குகளுக்கான போக்குவரத்து டெண்டர் நடைமுறையிலும் முறைகேடு நடந்துள்ளது. மேலும், பழைய மற்றும் பயன்படுத்தப்பட்ட பாட்டில்களைச் சேகரித்து மதுபான ஆலைகளுக்கு வழங்குவதில் ரூ.143 கோடி வரை முறைகேடு செய்யப்பட்டுள்ளது.

**14 மாவட்டங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை:**

வழக்கின் ஆதாரங்களைத் திரட்டும் வகையில், சென்னை, கரூர், நாமக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், கோவை, திருப்பூர், ஈரோடு, நீலகிரி உள்ளிட்ட 14 மாவட்டங்களில் 45 இடங்களில் ஊழல் தடுப்புத் துறையினர் ஒரே நேரத்தில் அதிரடிச் சோதனை நடத்தினர். கரூரில் உள்ள செந்தில் பாலாஜியின் வீடு, அவரது ஆதரவாளர்கள் மற்றும் நண்பர்களின் அலுவலகங்களில் நடத்தப்பட்ட சோதனையில் பல முக்கியமான ஆவணங்கள் மற்றும் டிஜிட்டல் ஆதாரங்கள் கைப்பற்றப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**கைது செய்யப்படுகிறாரா?**

வழக்கின் முதல் தகவல் அறிக்கை (FIR) சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், முன்ஜாமீன் மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால், செந்தில் பாலாஜியை விசாரணைக்காகக் கைது செய்ய லஞ்ச ஒழிப்புத்துறை சட்டரீதியான நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது. இந்நிலையில், செந்தில் பாலாஜி கட்சி நிர்வாகிகளுடன் அவசர ஆலோசனை நடத்தி வருகிறார்.

# இனி ஆண்டுதோறும் அரசின் திரைப்பட விருது; அமைச்சர் ராஜ்மோகன் உறுதி!



சென்னை, ஜூலை. 30–

சென்னையில் நடந்த ஒரு சினிமா விழாவில் தமிழக அரசின் செய்தித்துறை அமைச்சர் ராஜ்மோகன் பங்கேற்றார். அந்த நிகழ்ச்சியில் இயக்குனரும், நடிகருமான ரவி மரியா பேசும்போது, 'திரைத்துறையினரை ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசு ஒவ்வொரு வருடமும் விருது வழங்கி வருகிறது. ஆனால் இந்த விருதுகளை 5 ஆண்டுகளுக்கு ஒருமுறையோ, 8 ஆண்டுகளுக்கு ஒருமுறையோ சேர்த்து சேர்த்து கொடுக்கிறார்கள். சில சமயம் விருது கிடைக்கும்போது சம்பந்தப்பட்ட கலைஞர்கள் இல்லாமல்கூட போகிறார்கள். விருதுகள் உடனே கொடுத்தால் தான் மதிப்பாக இருக்கும்', என வேண்டுகோள் விடுத்தார்.

இதையடுத்து அமைச்சர் ராஜ்மோகன் பேசும்போது, "5 ஆண்டுக்கு ஒரு முறை கொடுத்தால் அது விருது கிடையாது. ஆண்டுதோறும் கொடுத்தால் தான் விருது. முதல்–அமைச்சர் விஜய்யின் அனுமதி பெற்று. இனி வெள்ளித்திரை, சின்னத்திரை, தமிழ் திரை விருதுகள் இனி ஆண்டு தோறும் தரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

# வேலை வாய்ப்பு

## TNSTC–யில் 1,518 பயிற்சி பணியிடங்கள்..!



நிறுவனம்: தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (TNSTC)

பணி வகை: பட்டதாரி, பட்டய (டிப்ளமோ) பயிற்சியாளர் (Apprentice)

காலியிடங்கள்: 1,518

பணி இடம்: தமிழகம் முழுவதும்

பயிற்சி காலம்: 1 ஆண்டு

விண்ணப்பம் தொடக்கம்: 28.07.2026

கடைசி தேதி: 28.08.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: NATS Portal (nats.education.gov.in)

சந்தேகங்கள் அல்லது கூடுதல் விவரங்களுக்கு:

tncop@boat–srp.com என்ற மின்னஞ்சல் முகவரியை தொடர்புகொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு, சம்பந்தப்பட்ட மண்டல அலுவலகங்களை தொடர்புகொள்ளலாம்:

பொது மேலாளர் (மனிதவளம்/நிர்வாகம்), TNSTC விழுப்புரம் மண்டலம்

பொது மேலாளர் (மனிதவளம்/நிர்வாகம்), TNSTC கும்பகோணம் மண்டலம்

பொது மேலாளர் (மனிதவளம்/நிர்வாகம்), TNSTC சேலம் மண்டலம்

பொது மேலாளர் (மனிதவளம்/நிர்வாகம்), TNSTC மதுரை மண்டலம்

பொது மேலாளர் (மனிதவளம்/நிர்வாகம்), TNSTC திருநெல்வேலி மண்டலம்

துணை மேலாளர் (பணியாளர்), MTC சென்னை

பொது மேலாளர் (இயக்கம்), SETC தமிழ்நாடு லிமிடெட் சென்னை

பயிற்சி இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (TNSTC).

# டாஸ்மாக் நிறுவனத்தில் முறைகேடு நடந்தது எப்படி? - பரபரப்பு தகவல்!

சென்னை, ஜூலை. 30–

டாஸ்மாக் நிறுவனத்தில் நடந்த முறைகேடு தொடர்பாக லஞ்ச ஒழிப்பு போலீசாரின் முதல் தகவல் அறிக்கையில், பரபரப்பு தகவல்கள் உள்ளன.

விவரங்கள் வருமாறு:–

டாஸ்மாக் நிறுவனத்தில் நடந்த முறைகேடு தொடர்பாக அரசு அனுப்பிய புகார் கடிதத்தின் அடிப்படையில், முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி உள்பட 7 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது. மதுபான ஆலைகளில் மதுபானங்கள் கொள்முதல் செய்வது, பார்கள் நடத்துவது, வாகன போக்குவரத்து, பழைய பாட்டில்களை வாங்குவது, டாஸ்மாக் நிறுவன அதிகாரிகளை பணி நியமனம் செய்வது உள்ளிட்டவற்றில் குற்றம்சாட்டப்பட்ட 7 பேரும் கூட்டாக சேர்ந்து, முறைகேட்டில் ஈடுபட்டு உள்ளனர். கடந்த 2021 முதல் 2025–ம் ஆண்டு வரை முறைகேடுகள் நடந்துள்ளன.

கொஞ்சம் கூட விதிமுறைகளை பின்பற்றாமல், அவர்கள் இஷ்டத்துக்கு முறைகேட்டில் ஈடுபட்டுள்ளனர். இதைதவிர, 'பார்ட்டி பண்ட்' (கட்சி நிதி) என்ற பெயரில் கட்சி நிதியும் முறைகேடாக வசூலிக்கப்பட்டு உள்ளது. மதுப்பிரியர்களிடம் இருந்தும், ஒரு பாட்டிலுக்கு ரூ.10 முதல் ரூ.100 வரை சட்டவிரோதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு மதுபாட்டில்களுக்கு ரூ.500 வரை வசூலித்துள்ளார்கள். 'கரூர் கேங்' என்ற பெயரில் செயல்பட்டவர்கள் இந்த கட்டண வசூலில் ஈடுபட்டுள்ளனர். ரத்தேஷ்ராஜ் சண்முகவேலும், மூலனூர் கார்த்திக்கும் டாஸ் மாக்கில் நடந்த முறைகேடுகளுக்கு மூல காரணமாக செயல்பட்டுள்ளனர். அவர்கள் சொல்படி விசாகனும், மண்டல மேலாளர்கள் ராமதுரை முருகனும், பன்னீர் செல்வமும் மற்றும் மாவட்ட டாஸ்மாக் அதிகாரிகளும் செயல்பட்டுள்ளனர்.



**இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்**

127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



## இன்றைய கார்ட்டூன்




## எல் நினோ தாக்கம் குறித்து ஆராய 7 பேர் கொண்ட குழு அமைத்தது தமிழக அரசு!




சென்னை, ஜூலை. 30–

தமிழகத்தில் எல் நினோ தாக்கம் குறித்து ஆராய்வதற்காகவும், கண்காணிப்பதற்காகவும் 7 பேர் கொண்ட நிபுணர் குழுவை அமைத்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

எல் நினோ தாக்கத்தினால் தென்மேற்கு பருவமழை குறைவாக பெய்ய வாய்ப்புள்ளதாக கூறப்படும் நிலையில், இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவிற்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையர் முருகானந்தம் தலைவராக செயல்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில், அண்ணா பல்கலை காலநிலை மாற்றத்துறை தலைவர் எஸ்.கண்மணி உள்ளிட்ட 7 பேர் இடம்பெறுகின்றனர்.

மழை அளவு, வெள்ள தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு இந்தக் குழு பரிந்துரைகளை வழங்கும். மேலும், வெயில் மற்றும் வறட்சியால் எளிதில் பாதிக்கப்படும் பகுதிகளை கண்டறிந்து இந்தக் குழுவினர் எச்சரிக்கை விடுப்பார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆன்லைன் மூலம் அனைத்து டெண்டர்களும் வெளியிடப்படும்; அமைச்சர் ரமேஷ் அறிவிப்பு!



சென்னை, ஜூலை. 30–

கோவில் பணிகளுக்கு புதிய டெண்டர் வழிகாட்டு நெறிமுறைகள் கொண்டு வரப்பட்டுள்ளன; ஆன்லைன் மூலம் அனைத்து டெண்டர்களும் வெளியிடப்படும் என அமைச்சர் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நிருபர்கள் சந்திப்பில் அமைச்சர் ரமேஷ் கூறியதாவது: பெரிய பெரும் முதலாளிகளுக்கு மட்டுமே வாய்ப்பு கிடைக்காமல், அனைவருக்கும் வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்ற முறையில், கோவில் பணிகளுக்கு புதிய டெண்டர் வழிகாட்டு நெறிமுறைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. அனைத்து கோவில்களுக்கும் டெண்டர் விண்ணப்பங்களில் ஒரே மாதிரியான படிவங்கள் கொண்டு வந்து இருக்கிறோம். 40 நாட்களாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுத்துள்ளோம்.

தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் கொண்டு வந்து இருக்கிறோம். ஹிந்து அறநிலையத்துறையின் அனைத்து டெண்டர்களும் இனி ஆன்லைனில் நடக்க போகிறது. இனிமேல் அனைத்து கோவில்களுக்கும் பொதுவான டெண்டர் முறை தான். ஆன்லைனில் டெண்டருக்கான ஒப்பந்த புள்ளி கோருவது நடக்கும். அதற்கான ஏலமும் ஆன்லைனில் நடக்கும்.

அனைத்து டெண்டர்களுக்கும் ஜிஎஸ்டி, பான், கட்டாயம். விலை பட்டியல் சரியாக இருக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். இதன் மூலம் சரியான விலைக்கு தான் விற்பனை செய்கிறார்களா என்று கண்காணிக்க முடியும். பார்க்கிங் பொறுத்த வரைக்கும் நிறைய இடங்களில் இருந்து புகார்கள் வருகின்றன.

ஒரு கோவிலில் 100 ரூபாய் வாங்குகிறார்கள்; ஒரு கோவிலில் 200 ரூபாய் வாங்குகிறார்கள் என நிறைய புகார்கள் வருகின்றன. டிஜிட்டல் முறையில் பில்லிங் கொடுக்க திட்டமிட்டு இருக்கிறோம். அதற்கான டெண்டர்களும் கொண்டு வந்து இருக்கிறோம். இவ்வாறு அமைச்சர் ரமேஷ் கூறினார்.

## பதினெட்டாம்படி கருப்பணசுவாமி கோயில் மணிக் கதவுகள் திறப்பு!



மதுரை, ஜூலை. 30–

கள்ளழகர் கோயில் ஆடிப் பெருந்திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான பதினெட்டாம்படி கருப்பணசாமி கோயிலின் மணிக் கதவுகள் திறக்கும் நிகழ்ச்சி புதன்கிழமை இரவு நடைபெற்றது.

ஆண்டுதோறும் ஆடி மாத பௌர்ணமி நட்சத்திர நாளில் ஒரு சில நிமிடங்கள் மட்டுமே நடைபெறக் கூடிய இந்த நிகழ்ச்சி, இரவு 7 மணிக்கு நடைபெற்றது.

கோயிலின் மணிக் கதவுகளுக்கு ஐதீக முறைப்படி சிறப்புபூஜைகள் நடத்தப்பட்டு, கதவு திறக்கப்பட்டது. அப்போது, பதினெட்டுப் படிகளிலும் கற்பூரம் ஏற்றப்பட்டிருந்த காட்சி பக்தர்களுக்குக் காட்சிப்படுத்தப்பட்டு, மகா தீபாரதனை நடைபெற்றது. திரளான பக்தர்கள் பக்தி முழக்கங்களுடன் பதினெட்டாம்படி கருப்பணசுவாமியை வழிபட்டனர்.

இரவு 7 மணிக்கு திறக்கப்பட்ட கோயில் கதவுகள் இரவு 7.05 மணிக்கு அடைக்கப்பட்டு, சந்தனம் பூசப்பட்டது. இதில் திரளான பக்தர்கள் பங்கேற்று, பக்தி முழக்கங்களுடன் பதினெட்டாம்படி கருப்பணசுவாமியை வழிபட்டனர்.

அடுத்த சில நிமிடங்களில் மணிக் கதவுகள் அடைக்கப்பட்டு, சந்தனம் பூசப்பட்டது.

பதினெட்டாம்படி கருப்பசாமி கோயிலின் கதவுகள், ஒரு ஆண்டில் 364 நாள்கள் மூடப்பட்டே இருக்கும். ஆடி பௌர்ணமி அன்று இரவு மட்டுமே இந்தக் கதவுகள் திறக்கப்படும். கதவுகள் திறக்கப்பட்டு, 18 படிகளுக்கும் தீபங்கள் ஏற்றப்படும். பூசாரிகளால் கதவுகளுக்கு சந்தனம், குங்குமம் பூசப்பட்டு, மாலைகள் அணிவித்து சிறப்பு தீபாராதனைகள் நடைபெறுவது வழக்கமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

## FIR இன்றி வங்கிக் கணக்கை முடக்க போலீசாருக்கு அதிகாரமில்லை: ஐகோர்ட்!




கோவை, ஜூலை. 30–

கோவை மருத்துவர் தம்பதியின் வங்கிக் கணக்கை எஃப்ஐஆர் பதிவு செய்யாமல் போலீசார் முடக்கியது சட்டவிரோதம் என சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது. ஆன்லைன் மோசடி வழக்குகளைத் தவிர, எஃப்ஐஆர் பதிவு செய்யாமல் வங்கிக் கணக்கை முடக்க காவல்துறைக்கு அதிகாரம் இல்லை என்று நீதிமன்றம் உத்தரவிட்டதுடன், மருத்துவர் தம்பதியின் வங்கிக் கணக்கு முடக்கத்தை உடனடியாக நீக்க வங்கிக்கு உத்தரவிட்டது.

## அதிரடியாக உயர்ந்த தங்கம் விலை...!



சென்னை, ஜூலை. 30–

சென்னையில் இன்று தங்கம் விலை உயர்ந்துள்ளது. அதன்படி, கிராமுக்கு 75 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் தங்கம் ரூ.13,230–க்கும் சவரனுக்கு 600 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 840 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி ரூ.235–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## நேபாளத்தில் 4-வது நாளாகத் தொடரும் ஊரடங்கு!



நேபாளம், ஜூலை. 30–

இந்திய எல்லையை ஒட்டிய நேபாளத்தின் சில பகுதிகளில் மத ரீதியான பதற்றத்தைத் தொடர்ந்து நான்காவது நாளாக ஊரடங்கு உத்தரவு நீடிக்கிறது. இதனால் அங்குள்ள மக்கள் பெரும் அவதியடைந்துள்ளனர். நேபாளத்தின் கோஷி மாகாணத்தில் உள்ள இந்திய எல்லைப் பகுதியான சுன்சாரி மாவட்டத்தில், மத ரீதியான வன்முறையைத் தொடர்ந்து விதிக்கப்பட்ட காலவரையற்ற ஊரடங்கு உத்தரவு வியாழக்கிழமை நான்காவது நாளாகவும் நீடித்துள்ளது.

## சபரிமலைக்கு நெய் வினியோகம் செய்ததில் ரூ.85 லட்சம் மோசடி.. விசாரணைக்கு உத்தரவிட்ட கேரள அரசு!





திருவனந்தபுரம், ஜூலை. 30–

சபரிமலைக்கு நெய் வினியோகம் செய்ததில் ரூ.85.5 லட்சம் மோசடி செய்யப்பட்ட விவகாரத்தில், வரும் வழியில் கலப்பட நெய்யை கலந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சபரிமலை அய்யப்பன் கோவிலுக்கு முந்தைய காலங்களில் தனியார் நிறுவனங்கள் மூலம் நெய் வினியோகம் செய்யப்பட்டு வந்தது. அப்போது தரம் குறைந்த நெய் வழங்கப்படுவதாக வந்த புகாரை தொடர்ந்து கேரளம் அரசின் பால்வள மேம்பாட்டு நிறுவனமான மில்மா நிறுவனத்திடம் இருந்து நெய் வாங்க முடிவு செய்யப்பட்டது

அதன் அடிப்படையில் கடந்த சீசனில் மில்மாவின் பத்தனம்திட்டா உற்பத்தி மையத்தில் இருந்து 1 லட்சத்து 77 ஆயிரத்து 66 லிட்டர் நெய் சபரிமலைக்கு வினியோகம் செய்யப்பட்டது.

ஆனாலும் கலப்படம் நிறைந்த தரம் குறைந்த நெய் வினியோகம் செய்யப்படுவதாக மீண்டும் குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக பால்வள மேம்பாட்டு கழக இயக்குனர் சாலினி கோபிநாத் விசாரணை நடத்தினார்.

விசாரணையில், மில்மா வழங்கிய நெய்க்கு பதிலாக சபரிமலைக்கு கொண்டு செல்லும் வழியில் மற்ற மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட தரம் குறைந்த கலப்பட நெய்யை 'மில்மா' டின்களில் அடைத்து சபரிமலைக்கு வினியோகம் செய்துள்ளனர். இதனை உணவு பாதுகாப்புதுறை அதிகாரிகள் சோதனை செய்யாமல் இருந்ததும் தெரிய வந்தது.

மேலும் இந்த முறைகேட்டில் மூத்த அதிகாரிகளுக்கு தொடர்பு இருந்ததும் அம்பலமாகி உள்ளது. அந்த வகையில் ரூ.85.73 லட்சம் மோசடி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிக்கை அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து இந்த மோசடி குறித்து விசாரிக்க லஞ்ச ஒழிப்பு போலீசுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

## 'இன்னும் சில மாதங்களில் ஆந்திராவிலும் பா.ம.க.' - அன்புமணி ராமதாஸ் அறிவிப்பு!



சென்னை, ஜூலை. 30–

ஆந்திராவிலும் பாமக தொடங்கப்பட உள்ளதாக அக்கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக இன்று நடைபெற்ற அக்கட்சியின் மாநில பொதுக்குழு கூட்டத்தில் பேசிய அவர்.,

"100 ஆண்டுகளுக்கு பின்னர் தமிழ்நாட்டில் இந்த ஆண்டு சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று அறிவிப்பு சட்டமன்றத்திலே ஆளுநர் உரையில் வந்திருக்கிறது என்றால், அதற்கு முழு காரணம் ராமதாஸும், பாட்டாளி மக்கள் கட்சியும் தான். இதை சாதி கணக்கெடுப்பு என புரியாதவர்கள் பேசுகிறார்கள். இதை எடுத்தால்தான் தமிழ்நாடு முன்னேறும். அதுதான் நமது இலக்கு.

2031–ல் பாமக ஆட்சி வரவேண்டும். நடந்து முடிந்த தேர்தலில் நம்மால் வெற்றிப்பெற முடியவில்லை. ஆனாலும் தேர்தல் முடிந்து தலைநிமிர்ந்து நின்றுக் கொண்டிருக்கிறோம். மற்ற கட்சிகள் துவண்டு விட்டன. தமிழ்நாட்டின் ஒவ்வொரு பிரச்சனைக்கும் முதலில் குரல் கொடுப்பது பாமகதான்.

## அசாம் வெள்ளப்பெருக்கில் உயிரிழப்பு எண்ணிக்கை 78 ஆக உயர்வு!



அசாம், ஜூலை. 30–

அசாம் மாநிலத்தில் கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தற்போது 78 ஆக உயர்ந்துள்ளது என அசாம் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் (AS DMA) அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. சிவசாகர் மாவட்டத்தில் இருவரும், கோலாகாட் மாவட்டத்தில் ஒருவரும் என புதிதாக 3 பேர் வெள்ளத்திற்கு பலியானதைத் தொடர்ந்து, ஒட்டுமொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 78 ஆக அதிகரித்துள்ளது. மாநிலம் முழுவதும் '3,00,031 பேர்' வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிவசாகர், சராடியோ, கோலாகாட், ஜோர்ஹாட், நகோன், பிஸ்வநாத் மற்றும் கம்ரூப் மெட்ரோபொலிட்டன் ஆகிய 7 முக்கிய மாவட்டங்கள் நீரில் மூழ்கியுள்ளன. மொத்தம் 21 வருவாய் வட்டங்களுக்கு உட்பட்ட 551 கிராமங்கள் வெள்ள நீரில் தவித்து வருகின்றன. மேலும் 21,523 ஹெக்டேர் விவசாய நிலங்கள் முற்றிலும் நீரில் மூழ்கி சேதமடைந்துள்ளன.

அசாம் மற்றும் அதன் சுற்றியுள்ள வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த சில நாட்களுக்கு மேலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை மையம் எச்சரித்துள்ளது. மீண்டும் பெய்யும் கனமழையால் நகர்ப்புற நீர் தேக்கம், ஆறுகளில் திடீர் வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவுகள் ஏற்படக்கூடிய ஆபத்தான பகுதிகளில் மேலும் பெரிய அளவிலான பாதிப்புகள் ஏற்படக்கூடும் என எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும், வெள்ள நீர் சாலைகளில் பெருக்கெடுத்து ஓடுவதால் முக்கிய நெடுஞ்சாலைகளில் வாகனப் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தில் சிக்கிய மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லும் பணிகளில் மாநில பேரிடர் மீட்புப் படை, தேசிய பேரிடர் மீட்புப் படை மற்றும் உள்ளூர் நிர்வாகத்தினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவு, குடிநீர் மற்றும் மருத்துவ உதவிகளை வழங்க நிவாரண முகாம்கள் திறக்கப்பட்டுள்ளன. பிரம்மபுத்திரா மற்றும் அதன் துணை ஆறுகளில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக தொடர்ந்து இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது. தற்போதைய வானிலை எச்சரிக்கையைத் தொடர்ந்து கரையோரப் பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## காமன்வெல்த் பாரா தடகளம்: தங்கம், வெள்ளி வென்ற இந்தியர்கள்!







புதுடெல்லி, ஜூலை. 30–

கிளாஸ்கோ காமன்வெல்த் பாரா தடகளத்தில் இந்தியர்கள் தங்கம், வெள்ளி வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்கள்.

திலீப் மஹாது காவிட் தங்கமும் முகமது பாசில் மோர்சிங்கனகத் வெள்ளியும் வென்றுள்ளார்கள்.

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில், 23–ஆவது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் ஜூலை 23 முதல் நடைபெற்று வருகின்றன. இதில் இந்தியாவிலிருந்து 78 வீரர்கள், 48 வீராங்கனைகள் பங்கேற்றுள்ளார்கள்.

காமன்வெல்த் பாரா டி47 100 மீட்டர் தடகளத்தில் இந்தியாவைச் சேர்ந்த திலீப் மஹாது காவிட் 10.71 வினாடிகளில் கடந்து தங்கம் வென்று அசத்தினார்.

இங்கிலாந்தின் கெவின் சந்தோஷ் 10.85 வினாடிகளில் கடந்து வெண்கலம் வென்றார். இதே பிரிவில் மற்றுமொரு இந்தியர் முகமது பாசில் மோர்சிங்கனகத் 10.83 வினாடிகளில் கடந்து வெள்ளி வென்று அசத்தினார். இதன்மூலம் இந்தியாவுக்கு இதுவரை 15 பதக்கங்கள் கிடைத்துள்ளன. ஏற்கெனவே, குத்துச்சண்டையில் 10 பதக்கங்கள் உறுதியாகியுள்ள நிலையில், இந்தியாவின் பதக்க எண்ணிக்கை இருபத்து ஐந்தை தாண்டுமென்பதும் கவனிக்கத்தக்கது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020